**Dated : 07.01.2025**

**O.S.No. 361/2022**

**DW.1 – கிருஷ்ணன்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு ஒரு மகன், 3 மகள்கள் ஆவார்கள். எனது மகன் பெயர் பாஸ்கர் ஆகும். எனது மகன் பாஸ்கர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அவர் ஐதராபாத்தில் வேலைக்கு செல்கிறார், ஆனால் என்ன தொழில் செய்து வருகிறார் என எனக்கு நேரடியாக தெரியாது. அவர் வாகனங்கள் வைத்திருந்தாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியா. எனக்கும், வாதிக்கும் முன்விரோதம் எதுவும் கிடையாது. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் பதிலுரையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் பாகபிரிவினை பத்திரத்திலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. நானும், கே. கோபால் என்பவரும் அண்ணன், தம்பி என்றால் சரிதான். 14.12.1998 தேதியில் நானும் எனது சகோதரர் கோபாலும் பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை பத்திரம் நானும், எனது சகோதரர் கோபால் என்பவரும் பாகப்பிரிவினை செய்துக்கொண்டு அதை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துக்கொண்டோம் என்றும், அந்த ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றாலும் சரிதான், அது வா.சா.ஆ.2 ஆகும். அவ்வாறு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்ட போது, அதில் நானும், கோபாலும் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை பத்திரம் 23.04.2020 தேதியிலிருந்து வாதி அருண்காந்தி வசம் உள்ளது என்றால் சரிதான். நான் வாதியிடம் கடன் பெற்ற போது அந்த பத்திரத்தை வாதியிடம் ஒப்படைத்து கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புரோ நோட்டை எனது மகன் ஜே.சி.பி. இயந்திரம் வாங்குவதற்காக ரூ.10.00 இலட்சம் வாதியிடம் கடன் கேட்டார் என்றும், அதற்காக அந்த புரோ நோட்டை நான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. புரோ நோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்பதால் தான், என்னுடைய கையெழுத்து கைரேகை நிபுணருக்கு அனுப்பி ஊர்ஜிதம் செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆன அசல் பத்திரத்தை வாதி வசம் ஒப்படைப்பதற்கு இந்த கடனை தவிர வேறு எந்த அவசியமும் ஏற்படவில்லை

என்றால் சரியல்ல. எதற்காக என்னுடைய பாகப்பிரிவினை பத்திரத்தை வாதி வசம் கொடுத்தேன் என்றால் எனக்கு எதுவும் தெரியாது, அந்த பத்திரம் எப்படி வாதியின் கைக்கு சென்றது என்ற விவரம் எனக்கு தெரியாது. தனது மகன் ஜே.சி.பி, வாகனம் வாங்குவதற்காக நான் வாதியிடமிருந்து ரொக்கமாக ரூ.10.00 இலட்சம் பெற்றுக்கொண்டேன் என்றும், அதை மறைத்து தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சொத்தை விற்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லையா என்றால் எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலத்தை சந்திரசேகர் என்பவர் கேட்டார் நான் அவருக்கு விற்க மறுத்துவிட்டேன். அந்த சந்திரசேகர் என்பவர் தபால் துறை அலுவலகத்தில் போஸ்ட் மேனாக பணிபுரிந்து தற்போது பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான்.

மேற்படி சந்திரசேகர் அவருடைய நிலத்தை அவருடைய வாரிசுகளுக்கு ஏற்கனவே பாகம் செய்துக்கொடுத்துவிட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதால், அவர் என்னிடம் மேற்படி நிலத்தை விலைக்கு கேட்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. சந்திரசேகர் என்னிடம் சொத்தை விலைக்கு கேட்கவில்லை என்றாலும், அவருக்கு என்னுடைய நிலத்தை வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா புரோ நோட்டில் சந்திரசேகர் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளதாலும், அவர் சாட்சி சொல்லியுள்ளதாலும், அதற்கு எதிராக மேற்படி சந்திரசேகர் என்னிடம் கையெழுத்து கேட்டார் என்றும், நான் கிரயம் கொடுக்க மறுத்ததால், சந்திரசேகர் வாதியை தூண்டிவிட்டு அந்த தாவா புரோ நோட்டை தயார் செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டின் படி பணம் பெற்றுக்கொண்டதால் தான், நான் எனது பாக உரிமை பத்திரத்தை வாதியிடம் ஒப்படைத்தேன் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் வாதியிடம் கடனை பெற்றுக்கொண்டு, தாவா புரோட்டை எழுதிக்கொடுத்ததால், வாதி தாவா படி டிகிரி பெற உரிமை உள்ளவர் என்று சொன்னால் அது தவறு.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- XXX,
Principal District Judge,
Krishnagiri.